O.S.No.359/2023 – Date : 29.01.2026

PW2 – கந்தசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் வீட்டிற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 7,8 கிலோமீட்டர் இருக்கும். பிரதிவாதி நேரில் வந்து என்னை வாதியின் வீட்டிற்கு அழைத்து சென்றாரா என்றால் நான் பால் கொடுக்க சென்று கொண்டிருந்தேன். அப்போது பிரதிவாதி என்னை அழைத்தார். அதனால் நான் சென்றேன். பணம் கொடுத்த காலம் கொரோனா காலம் என்றால் மக்கள் போய்க்கொண்டுதான் இருந்தார்கள். அப்போது கொரோனா தளர்வு காலம் இல்லை என்றும் எனவே வெளியே செல்ல முடியாத நிலையில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் வாதி கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/– S.Sumathy,

Principal District Judge, Salem.